**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டம் - 2021**

உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மே 14 ஆம் திகதிய 6371–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 01 ஆம் பட்டியலின் 4.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்ற

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமூகத்திற்கான சேவையை உரியவாறும் கணக்களிப்பொறுப்புடனும் வழங்குவதற்கும் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு பங்குபற்றும் மாகாணங்களிற்கு ஆதரவளிப்பதற்கும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் திறன்களை பலப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,665.63 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 100.65 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 12,222.41 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. ரூபா 4,220.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 23.65 மில்லியன் மிகுதி தொகை ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

| பேரேட்டுக் கணக்கு | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் விபரம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வங்கியிலுள்ள காசு (உள்ளூராட்சி சபையின் 134 ஆம் இலக்கம்) | 1,077.35 | 355.47 | வங்கி உறுதிப்படுத்தல் | உள்ளூராட்சி அதிகார சபைக்காக எதிர்காலத்தில் தனியான வங்கிக் கணக்கினை திறப்பதற்கும் இறுதி மீதி உறுதிப்படுத்தலை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | காசு மீதியை உறுதிப்படுத்துவதற்கு இறுதி மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை கணக்காய்விற்கு கையளிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நி.பி. 626 | நிதி பிரமாணங்களுக்கு இணங்க இரட்டை பதிவு அடிப்படையின் படி புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படவில்லை. | இரட்டை பதிவு அடிப்படையின் படி புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுவதற்கு பொருத்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன | நிதி பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேலைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட தொழிற்பாட்டு கையேட்டின் பந்தி 8.10 | செயற்திட்ட தொழிற்பாட்டு கையேட்டு அறிவுறுத்தல்களின் படி அனைத்து உள்ளூர் அதிகார சபையில் செயற்திட்ட நிதியை முகாமை செய்வதற்கு தனியான உள்ளூர் வங்கிக் கணக்கொன்று பேணப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், தெரிவு செய்யப்பட்ட கிழக்கு மாகாண மற்றும் வடக்கு மாகாண உள்ளூர் அதிகார சபையில் தனியான உள்ளூர் வங்கிக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. | பிஜயு-என்பி, பிஜயு-ஈபி களுக்காக தனியான வங்கிக் கணக்குகள் திறப்பதற்கும் மீதி தொகையை புதிதாக திறந்த கணக்கிற்கு மாற்றுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட கையேடுகளின் படி, அனைத்து உள்ளூர் அதிகார சபையில் தனியான உள்ளூர் வங்கிக் கணக்குகள் பேணப்படல் வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் 2.3.3 (இ) பந்தி | பொதுச்சேவையில் உறுதி செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், அவரது அவளது முக்கிய பதவியில் பணியாற்றும் போது செயற்திட்ட பதில் கடமை அடிப்படையில் சேவைக்கு விடுவிக்கப்படலாம். எவ்வாறாயினும், சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக வடமத்திய மற்றும் ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்கள் பிரதிப் பணிப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டு சம்பளங்களாக மொத்தம் ரூபா 963,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக பிரதம செயலாளர் செயற்பட்டிருந்தாரா என்பதைக் கண்டறிவதற்கு செயற்திட்ட பணிப்பாளரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், பிஎஸ்சி கூட்டங்கள் நடைபெற்றுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் கூட்டம் வருடத்தில் நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், இரண்டு கூட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது நடைபெற்றுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 பூர்த்தி செய்யப்படாத ஆலோசனை பணி**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| இயலளவைக் கட்டியெழுப்புதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய பணிகளை 2020 சனவரி 10 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு நான்கு ஆலோசனையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு ரூபா 3.69 மில்லியன் பகுதி கொடுப்பனவு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய காலப்பகுதிக்குள் ஆலோசனை பணியானது பூர்த்தியாக்கப்படாமையினால் மேற்குறிப்பிட்ட ஆலோசனை பணியிலிருந்து எவ்வித பலனும் பெறப்படவில்லை. | பூர்த்தி செய்யப்படாத வேலை பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் முன்பாக செயற்திட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கு தொழில்நுட்பத்துடன் சேர்ந்த பெறுகை, பொது நிதி முகாமைத்துவம், உள்ளூராட்சி சபை பங்குபற்றல் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகியவற்றிற்காக நியமனம் செய்யப்பட்ட நான்கு ஆலோசகர்களிற்கு ரூபா 6.47 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய செலவு பலனற்ற செலவாக கருதப்படுகிறது. இருந்தபோதிலும், ஒப்படை பூர்த்தியாகாமல் மிகுதி கட்டணத்தை செலுத்துவதற்கு 23 பெப்ரவரி 2022 இல் பெறுகை தீர்மானமானது எடுக்கப்பட்டது. | பூர்த்தி செய்யப்படாத வேலை பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் 02 ஆம் பட்டியலின் உறுப்புரிமை (இ) இன் பிரகாரம் 04 மாகாண சபைகளுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடிய பின்னர், மாகாண சபைகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். | உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் 02 ஆம் பட்டியலின் உறுப்புரிமை (ஈ) இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு மற்றும் வேலைத் திட்டம் என்பன வழிநடாத்தல் குழுவிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | வேலைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன வழிநடாத்தல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டதை தயாரித்து அதற்கான அங்கீகாரத்தை வழிநடாத்தல் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் தொடர்பாக ரூபா 1.7 மில்லியன் செலவானது செயற்திட்ட செலவினத்தின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை | இந்த செலவுகள் செயற்திட்டத்திற்கு தொடர்பானவை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |